# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | வரலாறு | 33 | T | I | | நேரம் :- 1 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

**கவனிக்குக**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக** இவ்வினாக்களுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்

1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

01. முற்கால மனிதனின் செயற்பாடுகள் பற்றி அறிய பயன்படும் எழுத்தாவனங்கள், ஆக்கங்கள் எவ்வாறு அழைக்கப்படும்

1. இலக்கியம் 2. தொல்பொருள் 3. சாசனம் 4. மூலாதாரம்

02. இலங்கையில் மகாவம்சம் என்ற நூலானது சிறப்புக்குரியதாய் அமைவதற்கான பொருத்தமான காரணமாக கருதக்கூடியது.

1. வரலாற்றின் சமகால நிகழ்வுகளை பதிவு செய்திருக்கின்றமை
2. மிகப்பழமை வாய்ந்த வம்சக் கதையாக காணப்படுதல்.
3. அரசியல், மற்றும் மதத் தகவல்களை தொடர்ச்சியாகக் கொண்டிருத்தல்
4. அடங்கியுள்ள தகவல்கள் உண்மையாக இருத்தல்

03. கீழ்வருவனவற்றில் பெறுமதிவாய்ந்த வரலாற்று மூலாதாரமாக காணப்படும் கல்வெட்டுக்கள் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றாக கருதக்கூடியது.

1. சமகால நிகழ்வுகளுக்குப் பொருத்தமானதாக காணப்படுதல்
2. அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாக கட்டியெழுப்ப முடியும்.
3. சிங்கள எழுத்துக்களின் பரினாம வளர்ச்சியை அறிய முடியும்
4. இலக்கிய மூலாதாரங்களில் காணப்படுபவற்றை உறுதிப்படுத்துதல்

04. மேல்வருவனவற்றுள் நிரல் Iல் நாட்டவரையும், நிரல் IIல் அந்நாட்டவரால் எழுதப்பட்ட இலக்கியமும் காணப்படுகிறது. இதனை இணைக்கும் பொழுது பெறப்படும் விடையாக கருதக்கூடியது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. உரோம் | A – அஜாயிப் அல்ஹிந் |
| 2. போர்த்துக்கேயர் | B – சொர்கத் தீவு |
| 3. ஆங்கிலேயர் | C – பூலோக சாஸ்திரப் பிரவேசம் |
| 4. அராபியர் | D – பர்ணாவோ குவரோஸின் குறிப்பு |
| | E – டிமுண்டோ |

1. CDBA 2. CEBA 3. CDAB 4. CDBE



kalvi.lk

05. கீழ்வருவனவற்றுள் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ள இடங்களுள் மிகப்பழமை வாய்ந்த இடமாக கருதக்கூடியது.

1. குருவிட்ட பட்டதொம்பெலன
2. அத்தன கொட அலுலென
3. கித்துல்கல பெலிலென
4. பாகியன்கல

06. உலர் வலயத்தில் குடியிருப்புக்கள் பரவலடையத் தொடங்கிய காலத்தில் வரலாற்றுக் காலத்திற்கான சுட்டியாக கருதக்கூடியது.

1. மண்ணின் தன்மை
2. குகைகளின் அமைவிடம்
3. குளங்களில் பரவல்
4. மழை வீழ்ச்சியின் தன்மை

07. பருமகமார்களுக்கு உயர் பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தை ஒருமுகப்படுத்தும் செயன் முறையை ஆரம்பித்த மன்னன்.

1. பண்டுகாபயன்
2. துட்டகைமுனு
3. தேவநம்பியதீசன்
4. 1ம் விஜயபாகு

08. கிராமத்தில் உள்ள இல்லத்தலைவர்களிடமிருந்தே "கமிக" என்பவர் தெரிவு செய்யப்படுகின்றார் என புத்தகோஷ தேரர் கூறியுள்ள இலக்கிய மூலாதாரம்.

1. சமந்தபாஷதீகாவ
2. வினயபீடகம்
3. ஜாதகஅட்டகதா
4. வினய அட்டகதா

09. மேல்வரும் சேனைப் பயிர்ச் செய்கை தொடர்பான செயற்பாடுகளுக்கு பொருத்தமான சொற்பதங்களை முறையே கொண்ட விடையை தெரிவு செய்க.

A – சேனையை பாதுகாக்க மரத்தின் மேல் குடிசை அமைத்தல்

B – பானையை தலையாக கொண்டு செய்யப்பட்டு வெருளி

C – கம்புகளால் வேலி அடைத்தல்

1. பெல, ஹெலிகடா, தண்டுவெட்ட
2. ஹெலிகடா, கனத்த, கினியாதிகாவ
3. பெல, தண்டுவெட்ட கினியாதிகாவ
4. ஹெலிகடா, பெல, தண்டுவெட்ட

10. மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்கில் வரிசைப்படுத்தும் போது பெறப்படும் விடையினை தெரிவு செய்க.

A - 1ம் உபதிஸ்ஸ மன்னன் கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைக்காக பிரவசவ விடுதியை அமைத்தமை.

B - நான்காம் காசியப்பன் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோருக்கு வைத்தியசாலையை நிறுவியமை.

C – லம்பகர்ண வம்சத்தில் புகழ்பூத்த மன்னனாக 1ம் கஜபாகு காணப்பட்டமை

D – ருவன்வெலிசாயவை அலங்கரிப்பதற்கு கண்ணாடிகளை மணிகளை பெற உரோமாபுரிக்கு பாதிகாபயன் தூது அனுப்பியமை.

1. BCDA
2. DCAB
3. BADC
4. DCBA



kalvi.lk

11. பண்டைய காலத்தில் இடம்பெற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தை நிர்வாகத்தில் கி.பி 10ஆம் நூற்றாண்டுக்குரியதாக கருதப்படுவது.

1. கொண்டவட்டவான் கல்வெட்டு
2. வேவல் கெட்டிய கல்வெட்டு
3. சொரபொரவாவி கல்வெட்டு
4. களுதிய பொகுன கல்வெட்டு

12. புராதன கால விவசாய முறையில் சேனைப்பயிர் செய்கைக்காக அறவிடப்பட்ட வரிகளை நீக்கிய அரசன்.

1. வசபன் 2. தாதுசேனன் 3. மகாசேனன் 4. நிஸங்கமல்லன்

13. நீர்வள நாகரீக காலத்தில், நிரல் I இல் கால்வாய்களையும், நிரல் II இல் அதனை அமைத்த அரசர்களும் தரப்பட்டுள்ளது இதனை இணைக்கும் போது பெறப்படும் விடைதொகுதி.

| நிரல் I | நிரல் II |
| --- | --- |
| 1. நுண்சாய்வு கால்வாய் | A - மகாசேனன் |
| 2. ஆழிசாராக் கால்வாய் | B - 1ம் அக்போ |
| 3. மிணிப்பே கால்வாய் | C – தாதுசேனன் |
| 4. பப்பதன்ன கால்வாய் | D – வசபன் |
| | E – துட்டகைமுனு |

1. CDBA 2. CDAB 3. DABC 4. DACB

14. A - குளக்கட்டு அரிப்புவதை தடுத்தல்

B - குளத்திலுள்ள சேறு, வண்டல் என்பவற்றை வெளியேற்றுதல்

C - நீர் வெளியேற்றும் போது அமுக்கத்தை கட்டுப்படுத்தல்

இச் செயற்பாடுகளுக்கும் பொருத்தமான குளத்தின் கூறுகளை முறையை கொண்டவிடை

1. வெளி வான் கதவு, கலிங்கல், அலைதாங்கி
2. அலைதாங்கி, தாழ்கலிங்கல், கலிங்கல்
3. அலைதாங்கி, கலிங்கல், கலிங்கல்தொட்டி
4. சுருங்கை, அலைதாங்கி, வெளிவான் கதவு

15. பண்டைய தேசிய அளவீட்டு முறையில் லாஹ, குறுனி, பேல்ல போன்ற அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைகளுடன் தொடர்புடையது.

1. நிறை அளவீடு 2. கால அளவீடு 3. நில அளவீடு 4. தூர அளவீடு

16. A திரவத் தன்மையற்ற கெட்டியான கறி – நியம்பலாவ

B மருத்துவக் குணமுடைய இலைகளை கொண்டு தயாரிக்கப்படும் கஞ்சி – எம்புல்கந்த

C நோயாளிக்கான கஞ்சி – அச்சுனு

D எள்ளுருண்டை - திலசங்குலிக்கா

மேற்குறிப்பட்ட உணவு சோடிகளுள் பொருத்தமற்ற சோடி.

1. A 2. B 3. D 4. C



kalvi.lk

17. மேலே தரப்படும் சூழல் தொடர்பான விடயங்களுக்குப் பொருத்தமான அரசர்களைக் கொண்ட விடைத் தொகுதி.

A மரஞ்செடி முகாமைத்துவ சட்டம்

B காட்டு மரங்களை வெட்ட வேண்டாம்

C உயர் நிலங்களிலுள்ள மரங்களை வெட்ட வேண்டாம்

1. 5ம் மகிந்தன், 3ம் உதயன், 4ம் மகிந்தன்
2. 4ம் மகிந்தன், 5ம் மகிந்தன், 3ம் உதயன்
3. 3ம் உதயன், 5ம் மகிந்தன், 4ம் மகிந்தன்
4. 5ம் மகிந்தன், 4ம் மகிந்தன், 3ம் உதயன்

18. கி.பி 13ஆம் நூற்றாண்டளவில் பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான அண்மிய காரணமாக கருதக் கூடியது

1. கலிங்கம் - பாண்டிய வம்சம்சங்களுக்கிடையிலான போராட்டம்
2. கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு.
3. மத்திய நிர்வாகம் சீர்குலைந்து போணமை
4. பொருளாதார வீழ்ச்சி காணப்பட்டமை

19. மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்கில் வரிசைப்படுத்தும் போது பெறப்படும் விடையினை தெரிவு செய்க.

A கிபி 1411ல் சீனாவின் ஆக்கிரமிப்பு இடம்பெற்றமை

B 550 ஜாதகக் கதைகள் சிங்களத்துக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டமை

C 2ம் பராக்கிரமபாகு தலதாமாளிகையை கட்டுவித்தமை

D ஆரியச்சக்கரவர்த்தி புனித தந்தாதுவை கொண்டு சென்றமை

1. ADCB 2. BCDA 3. CDBA 4. CDAB

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையைக் கொண்டு கீழ் வரும் 20ம், 21ம், 22ம் வினாக்களுக்கு விடை தருக.

| இராசதானி | | அரசன் | | இலக்கியம் | |
|---|---|---|---|---|---|
| A | தம்பதெனியா | D | 4ம் பராக்கிரமபாகு | G | சிங்களபோதிவங்ச |
| B | குருணாகல் | E | 6ம் பராக்கிரமபாகு | H | கவிசிலுமின |
| C | கம்பளை | F | 2ம் பராக்கிரமபாகு | I | பரவி சந்தேசய |

20. மேலே தரப்பட்டுள்ள தகவல்களுள் பொருத்தமற்ற சோடியாக கருதக் கூடியது

1. AH 2. BG 3. AF 4. CI

21. தம்பதெனிய இராசதானியடன் தொடர்புடைய கூற்றுக்களாக கருதக்கூடியது

1. EG 2. DI 3. FH 4.FG

22. 4ம் பராக்கிரமபாகுவடன் தொடர்புடைய கூற்றுகளர்க கருதக் கூடியது

1. AH 2 CG 3. BG 4. BH



kalvi.lk

**மேல்வரும் அரசர்களைக் கொண்டு கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக்**

A 2ம் இராஜசிங்கன்
D 1ம் விமலதர்மசூரியன்

B கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன்
E விஜய ராஜசிங்கன்

C 2ம்விமலதர்மசூரியன்
F ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

23. இலங்கைக்கு முதன் முதலாக ஜொரிஸ்வான் ஸ்பில்பேர்ஜன் என்பவர் வந்து சந்தித்த அரசன்.

1. A 2. E 3. C 4. D

24. ஆங்கிலேயே வருகையுடன் தொடர்புடைய அரசனை காட்டும் விடை

1.B 2. C 3. F 4. B

25. உபசம்பதா விழாவை நடத்துவதற்காக பர்மாவில் இருந்து புத்தபிக்குகளை வரவழைக்க முயற்சி செய்தும் தோல்வி அடைந்த அரசன்.

1. B 2. D 3. E 4. F

26. கி.பி 1796 ஆம் ஆண்டளவில் இலங்கையிலன் கரையோரப் பிரதேசத்தை பிரித்தானியர் முழுவதும் கைப்பற்றியபோது கண்டியை ஆட்சி செய்துகொண்டிருந்த அரசன்.

1. விஜய இராஜசிங்கன் 2. கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன்
3. இராஜாதி இராஜசிங்கன் 4. விக்கிரம இராஜசிங்கன்

27. ஒல்லாந்தர் கறுவா வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்த போது அவர்களுக்கு தடையாக இருந்து, ஒல்லாந்தருடன் முரண்பட்டு, கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்கள் மூடப்படுவதற்கு காரணமாக இருந்த அரசன்.

1. ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திரசிங்கன் 2. விஜய இராஜசிங்கன்
3. 2ம் விமலதர்மசூரியன் 4 . 2ம் இராஜசிங்கன்

**மேல் வரும் விடயங்களைக் கொண்டு வெறும் 28, 29, 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A கி.பி 1797 பின் வரிகள் பொருட்களாக அறவிடப்பட்டமை

B ஹஜ்ஜி மரிக்கார் பிரித்தானியர் பக்கம் சார்ந்திருந்தமை

C கி.பி 1818, 11ம் மாதம் உடன்படிக்கை ஏற்படுத்தியமை

D கம்பளையில் சிங்கள முஸ்லிம் இனக்கலவரம் ஏற்பட்டமை

28. இலங்கையில் வாழ்ந்த அனைத்து இன மக்களும் ஒன்றாக இணைந்து பிரித்தானியருக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கிய விடயத்துடன் தொடர்புடையது.

1. A சரியானது B பிழையானது 2. A யும் B யும் சரியானது
3. D சரியானது A பிழையானது 4. D யும் A யும் பிழையானது



kalvi.lk

29. பிரித்தானியருக்கு எதிரான முதலாம் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்பானது.

1. A யும் C யும் சரியானது
2. B பிழையானது A சரியானது
3. B யும் C யும் சரியானது
4. C சரியானது B பிழையானது

30. மியூறன் ஆணைக்குழுவிடம் தொடர்புடைய விடயமானது.

1. B சரியானது A பிழையானது
2. D சரியானது A பிழையானது
3. A சரியானது C பிழையானது
4. Aயும், B யும் பிழையானது

31. பிரித்தானியருக்கு எதிரான சமய தேசியமலர்ச்சியில் ஓரபிபாஷா என்பவர் இலங்கைக்கு வந்து இப்போராட்டத்தில் இணைந்து கொண்டார். இவர் எந்நாட்டை சேர்ந்தவராக கூறப்படுகின்றது.

1. அரேபியா
2. எகிப்து
3. சீனா
4. இஸ்ரேல்

32. "சிலோன் முஸ்லீம் ரிவிவ்"என்ற சஞ்சிகைகளில் கட்டுரைகளை எழுதி முஸ்லிம் சமய மறுமர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்.

1. M.C சித்திலெப்பை
2. D.P ஜாயா
3. ஆரபிபாஷா
4. முஸ்லிம்நேசன்

33. கி.பி 15ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு செல்வாக்கு செலுத்திய காரணிகளுள் மிக அன்மியமாக கருதக்கூடியது.

1. கல்வி மறுமலர்ச்சி ஏற்படுதல்
2. கொண்ஸ்தாந்து நோபிள் கைப்பற்றப்படல்
3. செல்வந்த வகுப்பினர் தோற்றம் பெற்றமை
4. வர்த்தகம் வளர்ச்சி அடைந்தமை

34. ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் நிரல் Iல் இலக்கியவாதிகளையும், நிரல் IIல் அவர்களால் எழுதப்பட்ட இலக்கியங்களும் தரப்பட்டுள்ளது. இதனை இணைக்கும் போது பெறப்படும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. தாந்தே | A லொரட்டாவுக்கு எழுதப்பட்ட கவிதை |
| 2. பெற்றாக் | B மூடர்களை பரிகசித்தல் |
| 3. தோமஸ்மூர் | C டிவினா கொமிடியா |
| 4. இராஸ்மஸ் | D இலியட், ஓடிஸி |
| | E யுடோப்பியா |

1. DABC
2. CABE
3. CBDA
4. CAEB

35. மேல்வரும் விடயங்களுள் ஐரோப்பிய மறுமலர்ச்சியின் கலைப்பண்புகளுள் அடங்காதது.

1. லௌகீகத்தினை வெளிப்படுத்தும் பண்புகளாக காணப்பட்டமை
2. சுதந்திரப் படைப்புக்கள் உருவாக்கப்பட்டமை
3. இரசனைக்கு முதலிடம் வழங்கப்பட்டமை
4. வகுப்பு ரீதியான கலைப்படைப்புக்கள் உருவாக்கப்பட்டமை



kalvi.lk

36. கைத்தொழில் புரட்சியினால் மனிதனுக்கு ஏற்பட்ட தீமையான விளைவுகளை கொண்ட விடைத் தொகுதி.

A யுத்த நடவடிக்கைகளில் இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்படல்

B கைத்தொழில் கழிவுகள் சூழலுக்குள் கலக்கப்பட்டமை

C சமூக ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தமை

D இளைஞர் போதைப் பொருட்களுக்கு அடிமையாதல்

1. A யும் D யும் 2. B யும் C யும் 3. C யும் A யும் 4. C யும் D யும்

பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் / பதங்களைக் கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A 1. கைத்தொழில் புரட்சி
2. முதலாளித்துவம், சமவுடமைவாதம்

B 1. மோட்டார் வண்டி
2. டெம்லர்

C 1. கோப்பி விதைகளை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை
2. தோமஸ் மெயிற்லண்ட்

D 1. தலையிடாமைக் கொள்கை
2. ஆடம்ஸ்மித்.

37. மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் பொருத்தமற்ற கூற்றுச்சோடியாக கருதப்படக்கூடியது.
1. C 2. B 3. D 4. A

38. இரண்டாவதன் தோற்றத்திற்கு முதலாவது காரணமான கூற்றுச்சோடி.
1. A 2. B 3. C 4. D

39. "ஜேர்மன்"நாட்டுடன் தொடர்புடைய கூற்றுச்சோடி.
1. B 2. A 3. C 4. D

40. A ஏழை, பணக்காரர் உருவாணமை
B சுற்றுச் சூழல். மாசடைந்தமை
மேல்வரும் கூற்றுக்களுள் கைத்தொழில் புரட்சியின் பொருளாதார விளைவாக கருதக்கூடியது

1. Aயும் B யும் பிழையானது 2. A சரியானது B பிழையானது
3. B சரியானது A பிழையானது 4. A யும் B யும் சரியானது



kalvi.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | வரலாறு | 33 | T | II | | நேரம் :- 3 மணித்தியாலம் 10.00 நிமிடம் |
|---|---|---|---|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி II

கவனிக்க

> பகுதி Iல் 1ம் வினா கட்டாயமானது
>
> பகுதி IIல் இருந்து நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கும் விடை தருக.

**எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி 1

(01) அ. கீழே (i)ல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் இலங்கைப்படத்திலும், (ii)ல் தரப்பட்டுள்ள இடங்களை உலகப் புறவுருவப்படத்திலும் குறித்தும் பெயரிடுக

01. ஆனையிறவு, கலாவாவி, சிலாபம், லங்காபட்டுன, கல்ஓயா, மினிஹாகல்கந்த, கம்பளை, யோதவாவி, மகியங்கனை, உருவெல, பாகியன்கல, கசாத்தோட்ட. (12 புள்ளிகள்)

02. கொன்ஸ்தாந்துநோபிள், மலாக்கா நீரிணை, போர்த்துக்கல், பர்மா, உரோம் சுமாத்ரா. (6 புள்ளிகள்)

ஆ. எதிரே தரப்பட்டுள்ள படத்தினை கொண்டு விடை தருக.



உரு A

01. a. உரு A யினால் காட்டப்பட்டுள்ளதை பெயரிடுக.
    b. இவ் உருவப்படத்துடன் தொடர்புடைய மன்னன்
    c. இத் தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட விகாரை
    d. இவ் உருவப்படத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பம் (4 புள்ளிகள்)



உரு B

02. a. எதிரே தரப்பட்டுள்ள படத்தில் காணப்படும் மன்னனை பெயரிடுக.
    b. இவ் அரசனின் அரச வம்சம்
    c. தலதாமாளிகைக்கு இவரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு பணி.
    d. கி.பி 1803 இல் பிரித்தானியர் படையெடுத்த போது தப்பியோடிய இடம் (4 புள்ளிகள்)



kalvi.lk

03. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய விடைகளை முறையே தருக

a. ஆங்கிலேயர் முதன் முதலாக இலங்கை வந்தபோது கண்டியை ஆட்சி செய்த அரசன்.

b. சோழரை இலங்கையிலிருந்து விரட்டி பொலநறுவையை ஆட்சி செய்த அரசன்

c. கம்பளை இராசதானி காலத்தில் இலங்கைக்கு வந்த அராபிய தேச சஞ்சாரி

d. இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியவன் போல என்ற அடைமொழி பெயரை கொண்டவன்

(4 புள்ளிகள்)

## பகுதி II

(02) 01. a. அம்பாந்தோட்டை பிரதேசத்தில் 24 அடி ஆழத்தில் சரளைக் கற்கள் புதையுண்டு கண்டறியப்பட்ட இடம்

b. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர் வலயக் குகைகள் 2 தருக. (3 புள்ளிகள்)

02. a. வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினை தருக

b. முன் வரலாற்றுக் காலத்தில் மரணச்சடங்கு இடம் பெற்றமைக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் இரண்டு தருக

(4 புள்ளிகள்)

03. முன் வரலாற்றுக் காலமானது தொழில்நுட்பத்திற்கான காலமாகும். இதற்கான இரண்டு ஆதாரங்களை குறிப்பிட்டு விளக்குக

(5 புள்ளிகள்)

04. வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட விவசாய முறைகளின் வகைகளைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக

(6 புள்ளிகள்)



kalvi.lk

(03) 01. இலங்கையில் 1ம் நகராக்கத்திற்கு உரித்தான பண்பினைக்கொண்டிருந்த நகரங்கள் மூன்றினை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

02. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளுக்கு பொருத்தமான விடையை தருக

a. வரலாற்றில் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்டயுத்த செயற்பாட்டுக்கு தலைமைத்துவத்தை வழங்கிய அரசன்

b. நாட்டை நிர்வகிப்பதற்கு முறையான வரிஅறவீட்டை மேற்கொண்ட அனுராதபுர ஆட்சியாளன்

c. குபேர கடவுளாக தன்னை மக்கள் மத்தியில் எண்ணக்கருவாக்கிக் கொண்டிருந்தவன்

d. சத்திரியவம்ச முறைப்படி ஆட்சி உரிமையை ஆரம்பித்து வைத்த அரசன். (4 புள்ளிகள்)

03. அனுராதபுர இராசதானியில் வசபன் முக்கியம் பெறும் விடயங்களை கீழ்வரும் தலைப்புகளில் உதாரணங்களுடன் விளக்குக

a. அரசியல் b. பொருளாதாரம் (5 புள்ளிகள்)

04. துட்டகைமுனு மன்னன் வரலாற்றில் முக்கியம் பெறும் விடயங்களை மூன்று காரணிகளுடன் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

(04) 01. கீழ்வரும் தகவல்களுடன் தொடர்புடைய கால்வாய்களை முறையே பெயரிடுக

a. கலாவாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் கால்வாய்

b. மகாவலிக்கு தெற்காக மகியங்கனை அருகில் வழிமறித்து கட்டப்பட்ட கால்வாய்

c. அம்பன் கங்கையை வழிமறித்து அணைகட்டி வடக்கே நீரை கொண்டு செல்வதற்கான கால்வாய். (3 புள்ளிகள்)

02. கீழே தரப்படும் குளங்களை அமைத்த மன்னர்கள் முறையே குறிப்பிடுக

a. திஸ்ஸமகாராம குளம்

b. மின்னேரியா குளம்

c. கந்தளாய் குளம்

d. மானான்கட்டிய குளம் (4 புள்ளிகள்)



kalvi.lk

03. புராதன கால தொழில்நுட்பவியலாளர்களினால் நீர்ப்பாசனங்களை அமைக்கும் போது பயன்படுத்திய தொழில்நுட்பங்களை கீழ்வரும் விடயங்களில் குறிப்பிட்டு விளக்குக

a. கால்வாய் b. பொய்கை (5 புள்ளிகள்)

04. கீழே குறிப்பிடப்படும் குளத்தின் கூறுகளுள் எவையேனும் மூன்றினை அதன் அமைப்பு, தொழிற்பாடு என்பவற்றை குறிப்பிட்டு விளக்குக

a. குளக்கட்டு b. அலை தாங்கி c. கலிங்கல் தொட்டி

d. சுருங்கை e. கலிங்கல் (6 புள்ளிகள்)

(05) 01. 2ஆம் நகராக்கம் உருவாவதற்கு முன்னர் காணப்பட்ட பிரதேச நிர்வாக அலகுகள் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றுக்கான தலைவர்களை முறையே தருக.

a. யாப்பகூவ

b. கோவிந்த மலை( கந்தெனிய குன்று)

c. மினிப்பே (3 புள்ளிகள்)

02. கீழ்வரும் அரசர்களால் தலைநகரமாக்கப்பட்ட இராசதாணிகளை முறையே குறிப்பிடுக

a. 1ம் புவனேகபாகு

b. 2ம் புவனேகபாகு

c. 6ம் பராக்கிரமபாகு

d. 3ம் விஜயபாகு (4 புள்ளிகள்)

03. 2ம் நகரமயமாக்க காலத்தில் கீழ்வரும் அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை உதாரணத்துடன் குறிப்பிட்டு விளக்குக

a. இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசியல் பணி

b. 4ம் பராக்கிரமபாகுவின் சமய இலக்கிய பணி (5 புள்ளிகள்)

04. பிற்கால ஆட்சி மையக்காலப் பகுதியில் காணப்பட்ட பொருளாதார நிலைகளை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(06) 01. கி.பி 1505 போத்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது கீழ்வரும் அரசர்கள் ஆட்சி செய்த இராசதாணிகளை முறையே தருக.

a. சேனா சம்மத விக்கிரமபாகு b. பரராசசேகரன்

c. எட்டாம் வீர பராக்கிரமபாகு (3 புள்ளிகள்)



kalvi.lk

02. போத்துக்கேயருக்கும், கண்டி இராசதாணிக்கும் இடையிலான போரினை கொண்டு விடை தருக

a. கண்டி அரசனுடன் ஒல்லாந்தர் தொடர்பை மேற்கொண்டதனை அறிந்து போத்துக்கேயர் மேற்கொண்ட போர்

b. தியாகு த மெல்லோ கஸ்ரோ என்ற போர்த்துக்கேய தளபதி தலைமை தாங்கிய போர்

c. 1ம் விமலதர்மசூரியன் தனது ஆட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு முன் எதிர்கொண்ட போர்

d. கிபி 1630 இல் மகாஅஸ்தான குமரனுடன் இடம்பெற்றபோர்

(4 புள்ளிகள்)

03. கி.பி 16ம் நூற்றாண்டளவில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை கோட்டையில் நிறுத்துவதற்கு சாதகமாக அமைந்திருந்த காரணிகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

04. போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் கண்டியை ஆக்கிரமித்த போதிலும் அவர்களால் கைப்பற்ற முடியாமல் போனதற்கான காரணங்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

(07) 01. கீழ்வரும் ஆண்டுகளில் கண்டி அரசனுடன் ஒப்பந்தம் / உடன்படிக்கையை மேற்கொண்ட ஒல்லாந்து தளபதிகளை குறிப்பிடுக

a. கிபி 1766 b. கிபி 1638 c. கிபி 1688

(3 புள்ளிகள்)

02. a. கி.பி 1803 இல் பிரித்தானியர் கண்டியை கைப்பற்றுவதற்காக முனைப்பு காட்டிய காரணிகள் 2 தருக.

b. கி.பி 1848 இல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் இருவரை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03. கி.பி 1818ஆம் ஆண்டு இடம்பெற்ற சுதந்திர போராட்டத்தில் சுதேசிகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக

(5 புள்ளிகள்)

04. இலங்கையில் தேசிய மறுமலர்ச்சிக்காக பாடுபட்ட கீழ் வரும் தலைவர்களில் மூவரைப் பற்றி குறிப்புரை எழுதுக

a. ஆறுமுக நாவலர் b. அநாகரிக தர்மபால

c. சித்திலெப்பை d. சேர் பொன் ராமநாதன்

e. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் f. D.P ஜாயா (6 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி III

(08) 01. கி.பி 15ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

02. மறுமலர்ச்சிக் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த

a. இத்தாலியஇலக்கியப் படைப்பாளர் இருவரை தருக.

b. வைத்திய துறையில் பிரசித்திபெற்றிருந்த இரண்டு கண்டுபிடிப்-பாளர்களை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03. மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல், பொருளாதார துறையானது ஐரோப்பாவில் ஏற்படுத்திய விளைவுகளை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

04. ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கையின் அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த துறைகளில் அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்தியதிலிருந்தது. என்பதற்கு பொருத்தமான உதாரணங்களை குறிப்பிட்ட விளக்குக.

(6 புள்ளிகள்)

(09) 01. கி.பி 19ம் நூற்றாண்டில் பிரித்தாணியாவைத் தவிர கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகள் மூன்றை தருக.

(3 புள்ளிகள்)

Education
අධ්‍යාපන

02. கைத்தொழில் புரட்சியில் கீழ்வரும் கண்டுபிடிப்பாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புக்களை முறையே தருக.

a. றொபேட் புல்டன்

B ஹம்ப்ரி டேவி

C சாமுவேல் மோர்ஸ்

D குக்லி மார்க்கோணி (4 புள்ளிகள்)

03. கைத்தொழில் புரட்சியானது போக்குவரத்து, தொலைத்தொடர்பாடல் போன்றவற்றில் கொண்டிருந்த முன்னேற்றத்தை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

04. கைத்தொழில் புரட்சியில் ஏற்பட்ட விளைவுகளை அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த துறைகளின் உதாரணங்களுடன் விளக்குக.

(6 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp
075 287 1457**